



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட மெரினா கடற்கரைப் பகுதியில் நீலக்கொடி சான்றிற்காக 7.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுச்சூழல் மற்றும் கடல்சார் சூழலியலை பேணும் மேம்பாட்டுப் பணிகளை நேற்று முன்தினம் (3.8.2025) பொதுமக்களின் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாஹு, துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இயக்குநர் ஏ.ஆர். ராகுல் நாத், நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மாமன்ற ஆளும்கட்சி துணைத்தலைவர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதல்வர்

# சிபு சோரன் மறைவு வேதனை அளிக்கிறது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, ஆக 5 -**

**ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் நிறுவனரும், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சருமான சிபு சோரன் அவர்களின் மறைவையொட்டி, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சாவின் நிறுவனர், ஜார்க்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் மற்றும் விடுதலையடைந்த இந்தியாவின் மிகவும் செல்வாக்கு மிக்க பழங்குடியினத் தலைவர்களில் ஒருவரான மதிப்பிற்குரிய சிபு சோரன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.



சிபு சோரன் அவர்களின் வாழ்க்கையே சுரண்டலுக்கு எதிரான இடைவிடாத எதிர்ப்பு மற்றும் சமூக நீதிக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்பட்டது.

ஜார்க்கண்ட் மாநிலம் உருவாவதற்கான இயக்கத்தின் முக்கியச் சிற்பிகளில் ஒருவராக, பழங்குடியின மக்களின் பல்லாண்டுகால உரிமை கோரலை ஒரு புதிய மாநிலத்தை தோற்றுவித்த அரசியல் சக்தியாக அவர் மாற்றினார்.

பெரும் தலைவரும் வாழ்நாள் போராளியுமான திரு. சிபு சோரன் அவர்களை இழந்து துயரில் ஆழ்ந்துள்ள ஹேமந்த் சோரன் மற்றும் ஜார்க்கண்ட் மாநில மக்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சென்னை கம்பன் கழகத்தின் சார்பில் – டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்புரையில்

# ‘பொலிவுமிகு பொன்விழா 51’ நிறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் விருதுகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

**சென்னை, ஆக.5-**

**சென்னை கம்பன் கழகத்தின் சார்பில், ‘பொலிவுமிகு பொன் விழா நிறைவு’, ‘கம்பன் விழா-51’ ஆகிய நிகழ்வுகள் சென்னை மயிலாப்பூர் ஏ.வி.எம். ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் வருகிற 8-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதி வரை 3 நாட்கள் நடைபெற உள்ளது. 8-ஆம் தேதி மாலை 5 மணிக்கு தொடங்கும் ‘பொலிவுமிகு பொன் விழா நிறைவு’ நிகழ்ச்சிக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார்.**

சென்னை கம்பன் கழகத்தின் தலைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வரவேற்கிறார். தெ.ஞான சுந்தரம், சாரதா நம்பி ஆரூரன், பழ.பழநியப்பன், சுகிசிவம், இலங்கை ஜெயராஜ் ஆகியோருக்கு ‘இயற்றமிழ் அறிஞர்’ என்ற விருதி னையும், திரைப்பட பாடலாசிரியர் கவிப்பேரரசு வைரமுத்துக்கு சென்னை ஆழ்வார்கள் ஆய்வு மையம் நிறுவிய ‘கவிச் சக்கரவர்த்தி கம்பர்’ விருதையும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கி பேசுகிறார். இதையடுத்து விருது பெற்றவர்களை கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்தி பேசுகிறார்.

இதேபோல தமிழ் இலக்கியத் துறைக்கு களப்பணி செய்துவரும் 19 பேருக்கும், மாநில அளவிலான இலக்கிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதனைத் தொடர்ந்து 9-ஆம் தேதியன்று, கம்பன் படைத்த ‘விருத்த சோலை யில் வியப்பு மலர்கள்’ என்ற கருப்பொருளை மையமாக கொண்டு இந்த ஆண்டு விழா தொடங்குகிறது. ‘அமிழ்தக் கம்பன் ஆய்வுரை அரங்கம்’, ‘முத்தமிழ்க் கம்பன் மொழி மாலை அரங்கம்’ என்ற தலைப்புகளில் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

### வேலூர் மக்களவை தொகுதியில்

# மண்டல அளவில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை அமைக்கப்படுமா?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

*புதுடெல்லி, ஆக. 5 -*

*வேலூர் மக்களவைத் தொகுதியில் ஆம்பூர், குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி போன்ற பல தொழிலாளர் சார்ந்த மண்டலங்களை உள்ளடக்கிய ஒரு பிரத்யேக ESIC மருத்துவமனையை ஒன்றிய அரசு உருவாக்குமா? என்று மக்களவையில் D.M.கதிர் ஆனந்த் எம்.பி. கேள்வி எழுப்பினார்.*

*வேலூர் மக்களவைத் தொகுதியில் ஆம்பூர், குடியாத்தம் மற்றும் வாணியம்பாடி போன்ற பல தொழிலாளர் சார்ந்த மண்டலங்களை உள்ளடக்கிய ஒரு பிரத்யேக ESIC மருத்துவமனைக்கான அதிக தேவை இருப்பதை உணர்த்தும் விதமாக ஏதேனும் கணக்கெடுப்பை ஒன்றிய அரசு நடத்தியதா? அல்லது அறிக்கைகளைப் பெற் றுள்ளதா, அப்படியானால் அதன் விவரங்கள் தருக?*



*இந்தப் பகுதியில் ஒரு ESIC மருத்துவமனையை நிறுவக் கோரி தமிழகத்திடமிருந்தோ அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்தோ அரசுக்கு ஏதேனும் முறையான கோரிக்கை வந்துள்ளதா, அப்படியானால், நிதி வடிவமைப்பு ஒப்புதல் மற்றும் மருத்துவமனையை இயக்குவதற்கான காலக்கெடு உள்ளிட்ட அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் தற்போதைய நிலை என்ன?*

*அதிக ESI சந்தாதாரர்களைக் கொண்ட ESIC விரிவாக்கத் திட்டங்களின் கீழ் வேலூருக்கு அதிக முன்னுரிமை அளிக்க போதுமான சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை ஒன்றிய அரசு உறுதி செய்யுமா? அப்படியானால் அதன் விவரங்கள்?*

*இல்லையென்றால் இந்தப் பின்தங்கிய பிராந்தியத்தில் உள்ள தொழில் துறை தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் மருத்துவ சமத்துவத்தை உறுதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ள விதம் என்ன?*

*இதற்கு ஒன்றிய அரசின் மாநில தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் ஷோபா கரந்த்லாஜ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு:*

*ஊழியர் மாநில காப்பீட்டு (ESI) மருத்துவமனைகளை அமைப்பது தொடர்ச்சியான செயல்முறையாகும். ESIC விதிமுறைகளின்படி 30 படுக்கைகள் மற்றும் 100 படுக்கைகள் கொண்ட ESI மருத்துவமனையை அமைப்பதற்கு முன்மொழியப்பட்ட இடத்திலிருந்து 25 கி.மீ சுற்றளவில் முறையே 20,000 மற்றும் 50,000 தற்போதைய காப்பீடு செய்யப்பட்ட நபர் (IP) மக்கள் தொகை / எதிர்கால IP மக்கள் தொகை தேவை.*

*தற்போது வேலூரில் 50 படுக்கைகள் கொண்ட ESIS மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. வேலூர் மக்களவைத் தொகுதியின் மீதமுள்ள பகுதிகளில் IP மக்கள் தொகை அதாவது. ஆம்பூர், குடியாத்தம், வாணியம்பாடி, பள்ளி கொண்டா, பேர்ணாம்பட்டு மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் 31.03.2024 நிலவரப்படி முறையே 26668, 9302, 13652, 1182, 5831 மற்றும் 3773 பேர் இருந்தனர்.*

*ஆம்பூரில் மருத்துவமனை அமைப்பதற்கான முன்மொழிவை ESIC டிசம்பர் 2024 இல் தமிழக அரசிடமிருந்து பெற்றது. இருப்பினும் நிலம் தேர்வு செய்தல் போன்ற விவரங்கள் இல்லாததால் அந்த முன்மொழிவு இதுகாறும் முழுமையடையவில்லை.*

*வேலூரில் உள்ள 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைத் தவிர ஆம்பூர், குடியாத்தம், வாணியம்பாடி, பள்ளி கொண்டா, பேர்ணாம்பட்டு மற்றும் வேலூரில் தலா ஒன்று என அரசு நடத்தும் 06 ESI மருந்தகங்களும் செயல்பாட்டில் உள்ளன. இப்பகுதியில் உள்ள அதன் பயனாளிகளுக்கு சுகாதார வசதிகளை வழங்க ESIC 02 மருத்துவமனைகளுடன் கூட்டு ஒப்பந்தத்தையும் செய்துள்ளது.*

*இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.*

### முத்தமிழறிஞர் கலைஞரின் 7 ஆம் ஆண்டு நினைவு நாள்:

# கடலூர் கிழக்கு மாவட்டத்தில் அமைதி பேரணி - படத்திற்கு மாலை!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

*கடலூர், ஆக. 5 -*

*கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:*

*கடலூர் கிழக்கு மாவட்டத்தில் வருகின்ற ஆகஸ்ட் 7 வியாழக்கிழமை அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாநகரம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர், வட்டம், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, அமைதி பேரணி நடத்தி ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

*அதுசமயம், நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர்கள், முன்னாள் மாவட்ட ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய,*



*நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி,, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மன்னை மிசா கு. பாலகிருட்டிணன்

### ஆகஸ்ட் 5 (2013)



**மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டு, கழகம் துவங்கிய காலத்திலேயே உறுப்பினராகி, மன்னார்குடி நகரச் செயலாளர் – மன்னார்குடி வட்டக் கழகச் செயலாளர் – தஞ்சை மாவட்ட பொருளாளர் – திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர் – பொதுக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளை வகித்து, முழுநேர கழகப் பணியாற்றியவர்.**

**கொத்தங்குடி ஊராட்சி மன்றத் தலைவராகவும், மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு கூட்டுறவு அமைப்புகளில் பொறுப்பேற்று, அப்பகுதி மக்களின் அன்பைப் பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றதுடன், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கடுங்காவல் தண்டனையும் – மிசா கைதியாக ஓராண்டு சிறைத் தண்டனையும் பெற்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கிண்டி எம். கோபால்

### ஆகஸ்ட் 5 (1985)



**இளம்வயதில் திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் உறுப்பினராக சேர்ந்து பணியாற்றியவர்.**

**1959ஆம் ஆண்டு கழகத்தின் சார்பில் சென்னை மாநகராட்சி தேர்தலில் கிண்டி கவுன்சிலராக போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதனால் அவரை ‘கிண்டி கோபால்’ என தலைவர் கலைஞர் அவர்களால் அன்பாக அழைக்கப்பட்டவர்.**

**சட்டப்பேரவை உறுப்பினராகவும் இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர். சென்னை பல்கலைக் கழக செனட் உறுப்பினராகவும் இருந்தவர்.**

**1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**